பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆ தை மீ 11 உ வியாழக்கிழமை (24-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 58

கோண்டாவிலில் 4 வீடுகள் சேதம்

உரும்பராய், ஜன. 24 நேற்றுக்காலை 9 மணியளவில் கோண்டாவில் தெற்கில்—திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு சமீபமாக—பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இரண்டு பொம்பர்கள் நடத்திய குண்டு வீச்சில் பலாலி வீதியின் இருமருங்கிலும் இருந்த மூன்று வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. அருகில் இருந்த மேலும் சில வீடுகளின் கூரைகளும் சேதமடைந்தன.

நான்கு குண்டுகள் இப்பகுதியில் வீசப்பட்டன. அவற்றில் ஒன்று வெடிக்காமல் புதைந்துண்ட நிலையில் கிடந்தது. (உ-5-154)

வல்வையில் நேற்றும் குண்டுவீச்சு அனர்த்தம்!

வல்வைப் பகுதியில் நேற்றும் நான்காவது நாளாகத் தொடர்ந்து கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

காலை 6.45 மணியளவில் ஆரம்பமான தாக்குதல் நேற்று இரவிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது.

நூற்றுக்கும் அதிகமான குண்டுகள், எரிகுண்டுகள் வல்வைப் பகுதியில் வீசப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதியில் ஏராளமான கட்டடங்கள், வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள் சேதமடைந்ததாக செய்திகள் கிடைத்துள்ளன. [உ-5-15]

தொண்டமனாறிலும் நேற்றுக் குண்டு வீச்சு!

நேற்றுக்காலை தொண்டமானாறு பகுதியிலும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரண்டு பொம்மர்கள் இப்பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் அப்பகுதியில் உள்ள வெளிக்கள நிலையக் கட்டடம் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் சியச் சகடை விமானமும் நேற்று தாக்குதல் நடத்தியதாகத் தெரியவந்தது [உ-5-15]

ஆனையிறவிலும் தொடர்ந்து தாக்கு!

நேற்று முன்தினமும் காலையில் இயக்கச்சி, ஆனையிறவுப் பகுதியில் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அவ்ரோவிலிருந்து பல பீப்பாய்க் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் சில வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் ஹெலியிலிருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மாலை ஐந்து மணிக்கு நான்கு பொம்மர்கள் இப்பகுதியில் குண்டுகளை வீசின. [உ-117]

எழுதுமட்டுவாளில்

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் எழுதுமட்டுவாள், கிளாலிப் பகுதியில் விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றது.

நான்கு பொம்மர்களும், ஒரு ஹெலியும் இப்பகுதியில் தாக்குதல்களை நடத்தின. தாக்குதலினால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது.

ஆனால் வீட்டுக்காரர்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

இரண்டு ஆடுகள் அந்த இடத்தில் உடல் சிதறிப்பலியாகின. சுமார் ஐம்பது வருடம் முதிய மாமரம் வேருடன் சாய்ந்து நாசமாகியது. (உ-117-)

கட்டுவனில் மோதல்
மேஜர் தாரணி வீரமரணம்

நேற்று அதிகாலை 4 மணியளவில் கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது அப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டது.

பல மணி நேரம் இடம்பெற்ற சண்டையின் பின் இராணுவத்தினர் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்றுத் தகவல் தெரிவித்தன.

நேற்று நடந்த இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த மேஜர் தாரணி (மதிவதனி சுப்பிரமணியம்-

[2 ஆம் பக்கம் பார்க்க]

அம்பாறையில் நேற்று 27 சிங்களவர் பலி!

கொழும்பு, ஜன. 24 அம்பாறை மாவட்டக் கிராமம் ஒன்றில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் 27 சிங்களவர் பலியாகினர் என்று கொழும்பில் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் 7 பெண்கள், 5 ஆண்கள், 15 குழந்தைகள் அடங்குகின்றனர்.

மூன்றாவது தடவையாக மீண்டும்

வட்டுக்கோட்டையில் விமானக் குண்டு வீச்சு!

பெண்மணி உட்பட மூவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி, 24

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்திப் பகுதியில் மீண்டும் மூன்றாவது தடவையாக நேற்று விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

நேற்று இடம்பெற்ற தாக்குதல்களில் ஒரு பெண்மணி உட்பட மூன்று அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். பல கட்டடங்கள் சேதமடைந்தன.

இரண்டு இடங்களில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதல்களில் பத்து வீடுகள், ஒரு கடை, ஒரு வீடியோ நிலையம், பொது நூலகம், ஒரு கோவில் என்பன சேதமடைந்தன.

வட்டுக்கோட்டைப் பகுதியை வட்டமிட்ட பொம்மர்கள் திடீரென குத்திப் பதிந்து குடியிருப்புகளை நோக்கிக் குண்டுகளை வீசின.

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்தியில் மூன்று குண்டுகளும், அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் ஒரு குண்டும் வீசப்பட்டன.

கடைக்கு பொருள்கள் வாங்க வந்த திருநாவுக்கரசு (வயது 60) என்ற வயோதிபர் அந்த இடத்திலேயே பலியானார்.

[2 ஆம் பக்கம் பார்க்க]

பயணி காயம்

நேற்று நண்பகல் 12 மணியளவில் வவுனியா நகரில் நிலைகொண்டிருந்த படையினர் திடீரென துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் நாருக்குச்சென்றுகொண்டிருந்த அப்பாவிப் பயணி ஒருவர் காயமுற்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பயணிகளும் படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

தவிப்பு

சவூதி அரேபியாவில் தொழில் பார்க்கும் இலங்கை பணிப்பெண்களில் குறைந்தது 30பேர் தலைநகர் ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஈராக் சவூதி அரேபியா மீது ஆரம்பித்து உள்ள ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து இப்பெண்களை வேலைக்கமர்த்தியிருந்த சவூதி எஜமானர்கள் நாட்டை விட்டு வெளியேறியதே இந்தத்தவிப்புக்குக் காரணம் என்று கொழும்பில் வெளியுறவு அமைச்சுப்பேச்சாளர் ஒருவர் சொன்னார். (அ-எ)

தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மொகவோயா என்ற இடத்திலிருந்து இராணுவத்தினரின் காவல் அரண் மீது நேற்றுக்காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரியவருகிறது. (உ)

ஊர்காவற்றுறையில் 2 சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 24 ஊர்காவற்றுறை முகாம் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர்; மிதிவெடியில் சிக்கி ஒரு சிப்பாய் கால் இழந்தார்.

நண்பகல் 11.30 மணியளவில் முகாமிலிருந்து படையினர் வெளியேற முற்பட்டபோது வெடித்த கடும் சண்டையின் இடையே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலை அடுத்து படையினர் பின்வாங்கியதாகவும்—படையினரிடமிருந்து ஐ. எம். ரவைகள் — 60, மிதிவெடிகளைக் கண்டுபிடிக்கும் கருவி ஆகியவை மீட்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார் என்

[2 ஆம் பக்கம் பார்க்க]

வலி. வடக்கில் நேற்று கடும் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 24 கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று அதிகாலை ஒரு மணி முதல் 6 மணி வரை இடைவிடாது குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்த ஷெல்கள் ஏழாலை மத்தி, குப்பிளான், ஊரங்குணை ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இத

[2 ஆம் பக்கம் பார்க்க]

தமிழக சபாநாயகர் தாக்கப்பட்டார்!

சென்னை, ஜன. 24 தமிழக சட்டசபைக் கூட்டம் நேற்று நடந்துகொண்டிருந்தபோது சபாநாயகர் தமிழ்க்குடிமகன், அ. தி. மு. கவைச் சேர்ந்த எம். எல். ஏக்கள் சிலரால் தாக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா தலைமையிலான எம். எல். ஏக்கள் அனைவரும், சட்டசபையின் இப்போதைய கூட்டத் தொடரிலும், வரப்போகும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரிலும் கலந்து கொள்வதற்கு சபாநாயகர் தடை விதித்தார்.

நேற்று சட்டசபைக் கூட்டம் ஆரம்பமானபோது ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. உறுப்பினர் ஆர். ராதா எழுந்து, "திருநாவுக்

[2 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



அப்ப... இனி சட்டசபை என்டு சொல்லாமல் சண்டை சபை [illegible] பாருங்கோ......!

அ. தி. மு. க. உறுப்பினர் காவலருடன் கைகலப்பு!

சென்னை, ஜன. 24 தமிழக சட்டசபையில் இருந்து சபாநாயகரால் வெளியேற்றப்பட்ட அ. தி. மு. க [illegible] அனைவரும் [illegible] வெளியே சபைப் பாதுகாவலர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர்.

அம்மோதலின் போது, அ. தி. மு. க எம். எல். ஏ திரு எஸ். ஆர். ராதாவின் மேற்சட்டை கிழிந்தது.

இனப் பிரச்சினை:
சமரசப் பேச்சு நடத்த ரம்பால் மத்தியஸ்தர்?

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்து, சமரசம் செய்து வைக்க பொதுநலவாய [கொமன்வெல்த்] நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் திரு. ஸ்ரீதத் ரம்பாலின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பிரதமர் திரு. பொப்ஹொக் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுதிய கடிதத்தில் திரு ரம்பாலின் பெயரைக் குறிப்பிட்டிருந்தார்.

பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணும்வரை திரு. ரம்பால் மத்தியஸ்தராக தொடர்ந்து பணியுரியத் தகுதியானவர் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது குறித்து அவுஸ்திரேலிய பிரதமர் பொப் ஹொக் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு கடிதம் ஒன்றை முன்னர் எழுதியிருந்தார் என்பது தெரிந்ததே. (அ-எ)

காமினியின் படத்தில் பிரிகேடியராக மகிந்தா!

பிரபல நடிகரும் உபசபாநாயகருமான காமினி பொன்சேகா தயாரிக்கும் படத்தில் சுதந்திரக்கட்சி எம்.பியான மஹிந்த ராஜபக்ஸ இராணுவ பிரிகேடியராக நடிக்க இணங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான காமினி பொன்சேகா அப்படத்தில் கேர்ணலாக நடிக்கிறார்.

இப்படத்துக்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை.

இராணுவ வீரர் ஒருவரின் வாழ்க்கையை மையமாக வைத்து இப்படம் தயாரிக்கப்படுகிறது. படப்பிடிப்பு முதலில் தியத்தலாவலையிலும் பின்னர் வடக்கு-கிழக்கு இராணுவ முகாம்களிலும் நடத்தப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

[வ-எ]

தமிழக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரசு தலைமையிலான பிரிவை 'அ.தி.மு.க-2' என்று சபாநாயகர் அங்கீகரித்திருப்பது அ.தி.மு.கவிற்கு அவமானத்தை ஏற்படுத்தி இருக்கிறது''— என்று சொன்னார்.

சபாநாயகரின் தீர்ப்பு விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்றும் அதனை விவாதத்திற்கு சபை எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் தி.மு.க. உறுப்பினர்கள் வாதிட்டனர்.

திரு ராதாவைப் பேசக்கூடாது என்று சபாநாயகர் உத்தரவிட்டார். அதற்கு அவர் இணங்காததுடன் அ.தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ரகளையும் செய்யத் தொடங்கினர்.

பின்னர் சபா மண்டபத்துக்கு நடுவே விரைந்துசென்று சபாநாயகருக்கு எதிராக அவர்கள் கோஷமிட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவையில் அமளிதுமளி ஏற்பட்டது அனைத்து அ.தி.மு.க. உறுப்பினர்களையும் தற்போதைய கூட்டத்தொடரிலும் பட்ஜட் கூட்டத்தொடரிலும் கலந்துகொள்ள சபாநாயகர் தடை விதித்தார்.

சபையை விட்டு அ.தி.மு.க உறுப்பினர்கள் சபாநாயகரின் இருக்கை இருக்கும் வழியாக வெளியேறிச் சென்றபோது இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் சபாநாயகர் தாக்கப்பட்டார்.

சபாநாயகர் அணிந்திருந்த துண்டு கீழே விழுந்தது

அ.தி.மு.கவினரின் தாக்குதலுக்குத் தாம் இலக்கானதாகவும், கையில் அடி விழுந்ததாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் இது என்று முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

பின்னர் சபை தொடர்ந்து நடந்தபோது இந்திரா காங்கிரஸ் சார்பில் குமரி அனந்தன் வருத்தம் தெரிவித்தார்.

''அ.தி.மு.க-2 தலைவர் திருநாவுக்கரசும் வருத்தம் தெரிவித்ததுடன், அ.தி.மு.கவினர் திட்டமிட்டு சபாநாயகர்மீது தாக்குதல் நடத்தினர் என்று கூறினார்.

சபாநாயகருக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் பல உறுப்பினர்கள் கோரினர்.

[உ-எ]

வலி: வடக்கில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் இப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன.

காலை பத்து மணியளவில் கட்டுவன் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழாலை மத்தியைச் சேர்ந்த இராசலிங்கம் துளசி என்ற 13 வயதுச் சிறுமி காயமுற்றார்.

நேற்றுக்காலை 10 மணி முதல் 10.30 மணி வரை இப்பகுதியில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும் இடம்பெற்றன.

[உ-15]

வட்டுக்கோட்டை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த திருமதி சிவஞானவதியார் சச்சிதானந்தம் (வயது 49) என்ற பெண்மணி குண்டு வெடிப்பால் தாக்கி வீசப்பட்டு, உடல் சிதைந்து பலியானார்.

கடைக்கு பத்திரிகை வாங்கச் சென்ற தம்பு குழந்தைவேலு (வயது 58) என்பவர் ஒரு காலும், ஒரு கையும் சிதறுண்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

மாவிட்டபுரம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து வட்டுக்கோட்டையில் தங்கியிருந்த திருமதி ரா. விஜயலட்சுமி, செல்வி மாலினிதேவி இரத்தினம் ஆகியோர் சிறு காயங்களுக்கு இலக்காகினர்.

கடந்த ஆகஸ்ட் 20 ஆம் திகதி சங்கரத்தைச் சந்திக்கு சமீபமாக இடம்பெற்ற விமானத் தாக்குதலில் 2 சிறுமியர் உட்பட ஐவர் பலியாகினர் என்பதும்-

அக்டோபர் 28 ஆம் திகதி அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயிலருகே இடம்பெற்ற குண்டு வீச்சில் ஒருவர் உயிரிழந்ததும் தெரிந்ததே.

(உ-க-161-15-30)

ஊர்காவற்துறை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும், இன்னும் சில சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

[உ-எ-5]

கட்டுவனில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரி] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இந்த மோதல் சம்பவத்தில் மூன்று படையினர் படுகாயமுற்றனர் என்று கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-5)

பிறந்த நாள் வாழ்த்து

ஞானசேகர் - பத்மலீலா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும்; திருமதி கிருஷ்ணம்மா கணபதி, திரு. திருமதி S.S. ராஜேந்திரன் தம்பதிகளின் அன்புப் பேரனுமாகிய

செல்வன். மதன்

24-01-1991 இல் தனது 2-வது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அண்ணமார், அக்காமார், அப்பா, அம்மா, தங்கை, ஆச்சிமார், தாத்தாமார், சித்தப்பா, சித்திமார், பெரியம்மா, அத்தைமார், அத்தான்மார், மாமாமார், மச்சாள்மார், நண்பர்கள் யாவரும் பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

75. அம்மன் றோட்,
யாழ்ப்பாணம்.
(15599)

ஈராக் தரைப் படை தாக்கு

★ சவூதி அரேபியாவில் குவைத் எல்லைப் புறத்தில் நிலைகொண்டுள்ள பன்னாட்டுப் படைகள் மீது ஈராக் தரைப் படைகள் தாக்க ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

கனரக டாங்கிகள் மற்றும் போர்க் கருவிகளை ஈராக் படைகள் பயன்படுத்தின என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஈராக் முந்துகிறது

பன்னாட்டுப் படைகள்மீது ஈராக் படைகள் தரைத் தாக்குதலை நேற்று ஆரம்பித்துவிட்டன என்று ஈரானிய செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட செய்தியை அமெரிக்க தரப்பினர் மறுத்துள்ளனர்.

தரைப்படைத் தாக்குதலை ஈராக் ஆரம்பித்து விட்டதா என்பதுபற்றி தகவல் வரவில்லை என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

ஈரானிய செய்தி ஸ்தாபனம் விடுத்த அறிக்கையின்படி, ஈராக்கிய படைகள் சவூதி அரேபியாவின் எல்லையில் ஒரு பகுதியைக் கைப்பற்றியுள்ளதாகவும் பன்னாட்டுப் படை வீரர்கள் சிலர் ஈராக் படையினரால் சிறைபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எகிப்து கெஞ்சுகிறது

எகிப்து நாட்டுக்கு நீரும் மின்சாரமும் அளித்துவரும் அஸ்வசன் அணைக்கட்டைத் தகர்த்துவிடவேண்டாம் என்று ஜனாதிபதி ஹுஸ்னி முபாறாக் ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹுசேனுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

எண்ணை விலை உயர்வு

குவைத்தில் எண்ணை வயல்கள் எரிகின்றன என்று வெளியான செய்திகளைத் தொடர்ந்து, உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை ஒரு பீப்பாய் 24 டொலர் வரை உயர்ந்தது.

போர் ஆரம்பித்ததில் இருந்து உலக சந்தையில் எண்ணை விலை வீழ்ச்சியடைந்து வந்தது.

உலகில் எண்ணை உற்பத்தி செய்யும் நாடுகளில் குவைத் மூன்றாவது இடத்தை வகித்து வந்தது.

இந்தியத் தூதரகம் தப்பியது

சவூதி அரேபியத் தலைநகர் றியாத்மீது ஈராக் கடந்த செவ்வாய்கிழமை செலுத்திய 'ஸ்கட்' ஏவுகணைகளில் ஒன்று, இந்தியத் தூதரகத்தின் அருகில் விழுந்து வெடித்தது. அந்தச் சமயத்தில் ஆறு இந்தியக் குடும்பங்கள் தூதரகக் கட்டடத்தில் தங்கியிருந்தன.

ஆனால் கட்டடம் சேதம் ஏதுமின்றித் தப்பியது.

மீண்டும் ஜப்பான் உதவி

வளைகுடாவில் பன்னாட்டுப் படைகளைப் பராமரிப்பதற்கு மேலும் 900 கோடி டொலர் பணத்தைக் கொடுத்துதவ ஜப்பான் முன்வந்துள்ளது. வளைகுடாப் போர் ஆரம்பமானது தொடக்கம் பன்னாட்டுப்படைகளுக்குத் தினமும் 50 கோடி டொலர் செலவிடப்பட்டு வருகிறது என்று அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

பஸ்ராவிலும் தாக்குதல்

ஈராக்கின் துறைமுக நகரான பஸ்ராமீது பன்னாட்டுப் போர் விமானங்கள் இரண்டாவது நாளாக நேற்றும் தாக்குதல்களை நடத்தின. பஸ்ராவில் குண்டுகள் வெடித்த சப்தம் ஈரானின் எல்லைப்புற நகரங்களிலும் எதிரொலித்ததாக அறிவித்தது.

கடாபியின் கணிப்பு

''சதாம் ஹுசேன் இறுதியில் குவைத்தைவிட்டு வெளியேறியே ஆகவேண்டும். இதற்காக பன்னாட்டுப் படைகளுக்கு அதிக உயிரிழப்பு ஏற்படும்''— லிபிய ஜனாதிபதி கேணல் மும்மார் கடாபி முன்கண்டவாறு தெரிவித்தார்.

''குவைத்தில் ஈராக் படைகள் இருப்பதை நான் எதிர்க்கிறேன். ஆனால் ஈராக்குக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகள் அணிதிரண்டிருப்பதையும் நான் எதிர்க்கிறேன்''— இப்படி கடாபி சொன்னார்.

இஸ்ரேலிடம் கோரிக்கை

பொறுமை காக்கும்படி இஸ்ரவேலுக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் நேற்று மீண்டும் வேண்டுகோள் விடுத்தன. ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரவேல் மூன்றாவது தடவை இலக்கானதைத் தொடர்ந்தே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனிடையில் ஈராக்கின் மூன்றாவது ஏவுகணைத் தாக்குதலை தொடர்ந்து, இஸ்ரவேலிய அமைச்சரவை நேற்று அவசரமாகக் கூடி நிலைமையைப் பரிசீலனை செய்தது. அமைச்சரவைக் கூட்டம் இரகசியமான இடம் ஒன்றில் நடைபெற்றது.

முட்கம்பி வேலி முகாம் தயாராகுகின்றது!

தரை யுத்தத்தின் போது சிறை பிடிக்கப்படும் ஈராக்கிய படையினரை தடுத்து வைக்கக்கூடிய பிரமாண்டமான முட்கம்பி வேலி முகாம் ஒன்றை சவூதி அரேபியாவில் பன்னாட்டுப் படையினர் அமைத்து வருகின்றனர்.

இம் முகாமில் 20 ஆயிரம் பேர் அடைத்து வைக்கப்படக்கூடிய இடவசதி இருக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது. தரை யுத்தம் தொடங்கியவுடன் தினமும் 2 ஆயிரம் ஈராக்கிய படையினர் சிறை பிடிக்கப்படுவர் என்று பன்னாட்டுப் படையினர் மதிப்பிட்டுள்ளனர்.

முதல் வாரத்தில் மட்டும் 20 ஆயிரம்பேர் சிறை பிடிக்கப்படுவர் என்றும் கணக்கிடப்பட்டே இம் முகாம் அமைக்கப்படுவதாகவும்- இம் முகாம் நேற்று முதல் தயார் நிலையில் இருப்பதாகவும் டுபாய் வானொலி தனது செய்தியில் தெரிவித்தது.

புஷ் யுத்தக் குற்றவாளி!

அமெரிக்க ஜனாதிபதி புஷ், பிரிட்டிஷ் பிரதமர் மேஜர், பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரண்ட் ஆகியோர் யுத்தக் குற்றவாளிகள் என்று ஈராக் வெளியுறவு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டது.

★ காயமடையும் ஈராக்கிய வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக பக்தாத்துக்கு 300 டாக்டர்களை அனுப்பி வைக்கப்போவதாக அல்ஜீரிய அரசு நேற்று அறிவித்தது.

இதேவேளை— பன்னாட்டுப் படை வீரர்களுக்குச் சிகிச்சை[illegible] டாக்டர்களை தென் கொரி[illegible] வைத்துள்ளது.

அமெரிக்கா நிராகரிப்பு

வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் எடுத்து வரும் சமரச முயற்சிகளை அமெரிக்கா நேற்று நிராகரித்து விட்டது. வளைகுடாவில் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வெள்ளை மாளிகை பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

தற்கொலைத் தாக்குதல் நடத்த ஈராக் அழைப்பு

மேற்கு நாடுகளுக்கு எதிராக தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும்படி உலகில் உள்ள இஸ்லாமிய இயக்கங்களுக்குப் பக்தாத் வானொலி நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

★ ஈராக் கடற்படையின் போர்க் கப்பல் ஒன்றை பன்னாட்டுப் போர் விமானங்கள் தாக்கி மூழ்கடித்து விட்டதாக அமெரிக்க தரப்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. இன்னொரு கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

★ வளைகுடாப் போர் விஸ்தரிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நேற்று எச்சரித்தார்.

★ காலநிலை இப்போது சீராகி வருவதால் ஈராக் மற்றும் குவைத் மீதான பன்னாட்டுப் போர் விமானங்களின் தாக்குதல் பலனளிக்கக் கூடிய வகையில் இனி இருக்கும் என்று அமெரிக்காவில் பென்டகன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

★ ஈராக்கில் இருந்த- குழந்தைகளுக்கான- ஒரேஒரு பால்மா தயாரிக்கும் தொழிற்சாலை பன்னாட்டுப் போர் விமானங்களின் தாக்குதலில் சேதமடைந்ததாக அமெரிக்க டெலிவிஷன் நிறுவனம் ஒன்று அறிவித்தது.

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

(இளைப்பாறிய வானிலை அவதான நிலைய உத்தியோகத்தர்)

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள் 23-01-1991 இல் அகால மரணமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், மனோரஞ்சிதா (பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), திருமலர் (அஸ்ரன் இன்ஸ்ரியூட், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-1-91 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மனோன்மணி திருநாவுக்கரசு

''திருமனோவாசா''
வட்டுக்கோட்டை.
[15598]

செல்வி பிலோமினா கந்தையா

காலஞ்சென்ற குருநாதர் கந்தையா, திருமதி நவநீதம் கந்தையா ஆகியோரின் அன்பு மகளும், ஜெயரட்ணம், யோகரட்ணம், காலஞ்சென்ற தம்பிரட்ணம், ராஜரட்ணம் [மின்சார ஒப்பந்தகாரர்], நவரட்ணம், மேரி ஸ்டெலா [ஆசிரியை, சென். அந்தனீஸ் மகா வித்தியாலயம், பாஷையூர்] ஆகியோரின் சகோதரியுமான செல்வி பிலோமினா புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று மாலை 4 மணிக்கு பாண்டியன்தாழ்வு அன்னம்மாள் ஆலயத்தில் நடைபெறும். அங்கு பூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ராஜரட்ணம்

46, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(15244)

கணபதிப்பிள்ளை துரையப்பா

கணபதிப்பிள்ளை துரையப்பா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி சிவகாமிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னபூரணம், பத்மநாதன் [இ. போ. ச. - திருமலை], ஏரம்பமூர்த்தி [சந்தனராசா-பெருந்தெருக்கள் திணைக்களம், முழங்காவில்], தர்மராசா [கவாம்பிள்ளை ஸ்ரோர்ஸ், கொழும்பு], சந்திரலீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற க. சோமசுந்தரம், க. தர்மலிங்கம், திருமதி பூமணி, திருமதி நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நல்லையா, கந்தையா, திருமதி நல்லம்மா, திருமதி இரத்தினபூபதி ஆகியோரின் மைத்துனரும்—

பொ. இன்னையா, திருமதி யோகராணி, திருமதி லக்ஷ்மணதேவி, [ஆசிரியை, முழங்காவில் மகாவித்தியாலயம்], திருமதி செம்மனச்செல்வி, சே. இராமநாதன் [கே. ஆர். என். ஸ்ரோர்ஸ், கொழும்பு — வீடியோ பிரசாத், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

ஈமக்கிரியைகள் 40, சிவப்பிரகாசம் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று இறுதிக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
து. பத்மநாதன் (மகன்)

40, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.
(15246)

உதயன்

சுக்ளா வருகிறார்!

இந்திய வெளியுறவு அமைச்சர் வித்யா சரண் சுக்ளா இன்னும் இரண்டு நாட்களில் - ஞாயிற்றுக்கிழமை - உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வருகிறார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் வெடித்த பின்னர், இந்திய அமைச்சர் ஒருவர் இப்போதுதான் வரப்போகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த யுத்த நிறுத்த அழைப்பை நிராகரித்து விட்டு, ஸ்ரீலங்கா அரசு தனது படையின் மூலம் இராணுவத் தாக்குதல்களை - விமானத் தாக்குதல்களை - முழு மூச்சுடன் தீவிரப்படுத்தி இருக்கும் வேளையில் சுக்ளாவின் விஜயம் அமைகிறது. அதனால் இம்முறை தமிழர் பிரச்சினை, போரை நிறுத்துதல், பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் ஆகிய விடயங்கள் அவரது விஜயத்தின்போது முக்கிய அம்சங்களாக ஆராயப்படும் என்று அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தியா ஏற்கனவே இலங்கை விவகாரத்தில் தலையிட்டு வெற்றிபெற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. முப்பத்தொரு மாதங்கள் இராணுவத்தை இலங்கையில் வைத்திருந்தும், தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தைச் சரிவர அமுல் செய்ய முடியாமல் அவப்பெயரையும், அபகீர்த்தியையும் இந்தியா தேடிக் கொண்டது.

நண்பன் யார், எதிரி யார் என்பதை சரிவர இனங் காணத் தவறியமை. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதை விட தனது நலனில் அதிக அக்கறை காட்டியமை. தனது பிராந்திய சட்டாம்பிள்ளைத் தனத்தை நிலைநிறுத்த எத்தனித்தமை. இவை உட்பட பல பாதகமான அம்சங்கள் கொண்ட தவறான அணுகுமுறையை அப்போது கடைப்பிடித்ததனாலேயே இந்தியா அவமானப்பட நேர்ந்தது.

அவ்வேளை பதவியில் இருந்த இந்திரா காங்கிரஸின் ஆதரவுடன் இப்போது ஆட்சி புரியும் சந்திரசேகர் அரசு இலங்கை விவகாரத்தை இம்முறை எப்படி அணுகப் போகிறது என்பதே இன்றைய கேள்வி. இது விடயத்தில் தெளிவான, உண்மையான, உளமார்ந்தமான நிலைப்பாட்டை இந்தியா இன்னும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. பட்டும் படாமலும், நழுவி வழுவி, வேகமின்றி, பதுங்கி, ஒதுங்கி அக்கறை இல்லாத போக்குடன் செயற்பட்டு வருகிறது.

தமிழர்களின் அபிலாஷைகளை முற்றாக இல்லாவிடினும், முக்கால் பங்கேனும் நிறைவேற்றும் விதத்தில் இந்தியா தனது திட்டங்களையும் அணுகுமுறைகளையும், தமிழர் நலன்நாடி, அவர்களுடன் கலந்து பேசி, வகுத்துச் செயற்படுமானால், இந்திய இராணுவ அடக்குமுறையின் கீழ் தாம்பட்ட கஷ்டங்களை மறந்தும், மன்னித்தும் அதன் நண்பனாக மாறுவதற்குத் தமிழர்கள் பின்நிற்கமாட்டார்கள்.

ஈழத் தமிழ் மண்ணினதும், ஈழத்தமிழர்களினதும் [அவர்களின் உயிர், உடைமைகளினதும்] பாதுகாப்புக்கு உறுதி அளிக்கும் தன்னாட்சி முறைக்கு கொழும்பு அரசை இணங்க வைக்கும் திறமையும், வல்லமையும் இந்தியாவிடம் இருக்குமானால் அது குறித்து தமிழர் மகிழ்ச்சி அடைவர்.

அம்புலன்ஸ் சேவைக்கும் டீசல் வழங்க அரசு மறுப்பு!

யாழ்ப்பாணம் ஜன. 24

ஆபத்தான நோயாளர்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரும் அம்புலன்ஸ்களுக்கு டீசல் வழங்க கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மறுத்துவிட்டது.

இதுவரை அம்புலன்ஸ்களுக்கு டீசல் வழங்கி வந்த செஞ்சிலுவைச் சங்கமும் அதனை நிறுத்திவிட்டது.

இதன் விளைவாக அம்புலன்ஸ் வண்டிகள் இயங்குவது ஸ்தம்பிதநிலை அடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் ஆபத்தான நோயாளிகளையும், கர்ப்பிணித் தாய்மார்களையும் அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவர 15 அம்புலன்ஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுவது வழக்கம்.

டீசலில் இயங்கும் ஒன்பது அம்புலன்ஸ்களுக்கும் மாதாந்தம் 1 225 லீட்டர் டீசலும்-

அம்புலன்ஸ் பாவிக்கப்படும் மூன்று ஜீப்புகளுக்கும் மாதாந்தம் 130 லீட்டர் டீசலும் -

மற்றும் மூன்று அம்புலன்ஸ்களுக்கு 470 லீட்டர் பெற்றோலும் தேவை.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். சுகசபை இந்தச் சேவை குறித்து விளக்கியும், அம்புலன்ஸ் சேவை நடக்க முடியாததால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுக் காட்டியும் டிசம்பர் 18 ஆம் திகதியன்று அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு கடிதம் அனுப்பி இருந்தார்.

அம்புலன்ஸ் சேவைக்கு டீசல் வழங்க முடியாது என்று தெரிவித்து கூட்டுப்படைத் தலைமையகம் ஜனவரி முதலாம் திகதி கடிதம் ஒன்றை அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அனுப்பியுள்ளது. அதன் பிரதி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டு இப்போது கிடைத்துள்ளது.

இதுவரை உதவி வந்த செஞ்சிலுவைச் சங்கமும் டீசல் வழங்குவதை நிறுத்திவிட்டது. அதனால் அம்புலன்ஸ் சேவை ஸ்தம்பிதம் அடையும் ஆபத்துத் தோன்றி உள்ளது.

[அ 3-6]

ஒரு வாரத்தில் ரூ. 9 லட்சம்

யாழ்ப்பாணம், ஜன 24

சுன்னாகம் தபாலகத்தில் சமீபத்தில் மக்களின் அவசியத் தேவைகளுக்கு ஒன்பது லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

உள்நாட்டு, வெளிநாட்டுக் காசுக்கட்டளைகள், பிரிட்டிஷ் காசுக்கட்டளைகள், தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பணத்தை மீளப் பெறுதல், தர்மப்பணம் ஆகிய கொடுப்பனவுகளாகவே இந்த ஒன்பது லட்சம் ரூபாவும் ஒருவார காலத்தில் வழங்கப்பட்டதாக சுன்னாகம் தபாலதிபர் திரு. இ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

யுத்தச் சூழ்நிலை காரணமாக மேற்படி கொடுப்பனவுகள் குடாநாட்டில் அரிதாகவே நடைபெற்றுவருகின்றன. அதனால் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் சுன்னாகம் தபாலகத்துக்கு வந்து தமது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டனர். (அ)

யாழ். ஆஸ்பத்திரியில்

சத்திர சிகிச்சைப் பிரிவு பூரண செயற்பாடு

யாழ்ப்பாணம், ஜன 24

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின்போது பலத்த சேதமுற்றிருந்த யாழ். ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சைப் பிரிவு திங்கட்கிழமை தொடக்கம் முழு அளவில் செயற்படத் தொடங்கியுள்ளது.

சத்திர சிகிச்சைப் பிரிவுக்கான திருத்தவேலைகள் பூரணமாக முடிவுற்று விட்டன. இதனால் அவசரநோயாளர்களுக்கு எதுவித தங்கலுமின்றி உடனடியாக சிகிச்சை அளிக்க வசதி ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது ஒரேசமயத்தில் நான்கு நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை செய்யக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ல 15]

ஜீ. சி. ஈ. பரீட்சை நடத்த ஒத்துழைப்புத் தருக!

பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். மாவட்டத்தில் ஜீ.சி.ஈ. பரீட்சைகளை எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் நடத்தத் திட்டமிட்டுவருகிறோம். இதற்கு அனுகூலமாக மாணவர்கள், கல்விமான்கள் மற்றும் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

— இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டுவிழா முதல் நாள் நிகழ்ச்சியில கலந்துகொண்டு உரையாற்றிய போது வட பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு ஓ சுந்தரலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

யாழ் மாவட்டத்தில் பரீட்சைகளை நடத்தும் சூழ்நிலை ஓரளவு நிலவினாலும் கிழக்கில் மாணவர்களது கல்வி இன்னமும் சகஜநிலைக்குத் திரும்பவில்லை. அங்கு மாணவர்கள் ஏராளமானோர் இடம்பெயர்ந்து காடுகளில் வசிக்கிறார்கள். இந்த நிலையில் இங்குமட்டும் பரீட்சைகளை நடத்தலாமா என்பது கேள்விக்கு உரியது. இது பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும் — என்றும் அவர் சொன்னார். (உ 5)

இந்தியக் கப்பல் மூழ்கியது

புதுடில்லி, ஜன 24

மால்டா கடலில் இந்தியக் கப்பல் ஒன்று மூழ்கியதில் அதில் இருந்த சிப்பந்திகளில் பதினாறு பேர் உயிரிழந்தனர். ஏனையோர் காப்பாற்றப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-ர

இஸ்ரவேல் மீது 3 ஆவது தடவை ஏவுகணைத் தாக்குதல்

டெல் அவிவில் மூவர் மரணம்

டெல் அவிவ் ஜன. 24

இஸ்ரவேல் மீது மூன்றாவது தடவையாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 'ஸ்கட்' ஏவுகணைத்தாக்குதலை ஈராக் நடத்தியது.

இஸ்ரவேல் அனுப்பிய இரண்டு 'பேட்ரியட்' ஏவுகணைகளால் இந்த ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்க முடியாமற் போய்விட்டது

அதனைத் தொடர்ந்து ஸ்கட் ஏவுகணைகளில் ஒன்று தலைநகர் டெல் அவிவின் மத்திய பகுதியில் விழுந்து வெடித்தது.

இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது பல கட்டடங்கள் சேதமடைந்தன. மூவர் உயிரிழந்தனர். அவர்களில் இரண்டு வயோதிபர்கள் மாரடைப்பால் மரணமானார்கள். மூன்றாமவர் நசுங்குண்டு உயிரிழந்தார். நூற்றிரண்டு பேர் காயமடைந்தனர்.

இஸ்ரவேல் மீதான ஏவுகணைத்தாக்குதலை ஈராக் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளிலும் இரண்டு தடவைகள் நடத்தியது

இஸ்ரவேலிலேயே "பேட்ரியட்" ஏவுகணைக்கு முதல் தோல்வி

★ எதிரிகளின் ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிப்பதில, அமெரிக்காவின் 'பேட்ரியட்' ஏவுகணை இஸ்ரவேலில் தான் முதன்முதலாகத் தோல்வி கண்டது என்று அறிவிக்கப்படுகிறது.

★ அல்ஜீரியா, ஜோர்தான், ஈராக், குவைத், ஈரான் உட்பட 9 நாடுகளைச் சேர்ந்த பிரசைகள் விஸா பெறாமல் சிங்கப்பூருக்குச் செல்ல முடியாது என்று அறிவிக்கப்பட்டுளளது சிங்கப்பூரில் நாசகாரச் செயல்கள் இடம்பெறுவதைத் தவிர்க்குமுகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிங்கப்பூர் அரசு அறிவித்துள்ளது.

ஹுசேனை பதவி விலகக்கோரிய ஈராக்கியருக்கு மரண தண்டனை

ஜனாதிபதி சதாம் ஹுசேனை பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையை பக்தாத் வானொலி மூலம் விடுக்க முயன்ற ஏழு ஈராக்கியர்களை பக்தாத் இராணுவம் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொன்றது.

இத்தகவலை லண்டன் பத்திரிகை 'கார்டியன்' நேற்று வெளியிட்டது.

அவர்களில் இருவர் ஆளும் பாத் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

அந்த எழுவரும் பக்தாத் வானொலி கட்டடத்தினுள் பலாத்காரமாக நுழைய முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

சதாமை கைதுசெய்து விசாரிக்க வேண்டும் என்கிறது அமெரிக்கா

வளைகுடாப் போர் முடிவில் ஜனாதிபதி சதாம் ஹுசேனைக் கைதுசெய்து யுத்தக் குற்றங்களுக்காக விசாரிக்க வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இது சம்பந்தமாக பதினைந்து பக்க அறிக்கை ஒன்றை அமெரிக்க பிரேஷ்— அதிகாரிகள் பரிசிலனை செய்து வருகின்றனர்.

வளைகுடாப் போரில் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட பன்னாட்டுப் படையினரை மனிதாபிமானமற்ற ரீதியில் ஈராக் நடத்துவது தொடர்பான குற்றத்துக்காக ஜனாதிபதி சதாம் ஹுசேனை யுத்தக் குற்றவாளியாக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

இனரீதியாகப் பிரிவுபடும் நாடுகள் பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சியே சரியான தீர்வு

> கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா கொழும்பு ஆங்கில வார இதழ் சண்டே டைம்ஸுக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது. இன்று இறுதிப் பகுதி வெளிவருகிறது.

கேள்வி: அரசின் நிபந்தனைகள் சரியானவையாக இருப்பினும், அவை பேச்சுகள் நடத்துவதற்கு இறுக்கமாக நிற்கக்கூடாது என்று நீங்கள் கூறுகிறீர்களா?

ஜா: சொந்த மக்களுடன்தான் போராட்டம் நடத்துவதாக உங்கள் அரசாங்கமே கூறியுள்ளது. அவர்கள் வெளிநாட்டவர்கள் அல்லர். ஆனால் அவர்களும் சொந்த மக்களையே எதிர்த்துப் போராடுகிறார்கள்.

கேள்வி: கடந்த ஆறு மாத காலச் சண்டையில இலங்கை படைகள் ஏதும் வெற்றி அடையவில்லை என்று கூறுகிறீர்களா?

ஜா: வடபகுதியில் அவர்கள் வெற்றி அடையவில்லை- பலாலி, காங்கேசன்துறையைத் தவிர வடபகுதியில விடுதலைப்புலிகள் தங்கள் நிலையை ஸ்திரப்படுத்தி உள்ளனர் கிழக்கில் அப்படியன்று தங்கள் நிலையை விடுதலைப் புலிகளினால் நிலை நிறுத்த முடியவில்லை.

கேள்வி; 1987 உடன்பாட்டின்படி இலங்கை நிற்கவேண்டும் என இந்தியா எதிர்பார்க்கிறது என்று கூறுகிறீர்களா?

ஜா: இரு நாடுகளின் தலைவர்களுக்கு இடையேயான ஒப்பந்தம் அது. அதற்குமேல் போகவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

அந்த ஒப்பந்தத்தை உன்னிப்பாகப் பார்க்கும்படி என் இலங்கை நண்பர்களைக் கேட்[illegible] வேதமாக அதனைக் கருதக் கூடாது. ஒரு இரவில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மந்திரக்கோலாக அதனைக் கருதவேண்டும் என்று நான் கூறவில்லை

ஒப்பந்தத்தை ஆரம்பமாகக் கருதலாம். அதனை மேலும் விஸ்தரிக்கலாம். ஒப்பந்தத்தைக் கைவிட்டால் எல்லாமே புதிதாகத்தான் தொடங்கவேண்டும். அதற்கு கால அவகாசம் இருக்குமா என்பது எனக்குத் தெரியாது.

பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணவேண்டும் என்று தானே விரும்புகிறீர்கள்? யுத்தம் தொடருவதை நீங்கள் விரும்பவில்லை

...தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழ் தேசிய இராணுவம், தமிழர் தாயகம் ஆகிய நிபந்தனைகளை முன் வைத்துள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்கள் அனைவரும் தமிழர் தாயகம் என்ற கோரிக்கையை திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள். இக் கோரிக்கைக்கு இது காலவரை கொடுத்து வந்த கவனத்திலும் பார்க்க கூடுதல் கவனிப்பு கொடுக்கப்படவேண்டும் என்று நான் நினைக்கின்றேன்.

1987 ஒப்பந்தம் தற்போது மூலையில் வைக்கப்பட்டிருக்கலாம் ஆனால் அது முறையாக ரத்துச் செய்யப்படவில்லை. ஒப்பந்தத்தின் ஒவ்வொரு சொல்லும், உணர்வும் என்னும் இருக்கும் ஒப்பந்தம் பற்றி ஏன் ஈடுபாடு காட்டுகிறீர்கள் என்று கேட்கின்றீர்கள். அதற்கு பல காரணங்கள் உள்ளன. புவியியல் நிலை அப்படி அமைந்து உள்ளது.

நாம் தும்மினால் உங்களுக்கு தடிமன் வருகிறது. அதுபோல் நீங்கள் தும்மினால் எங்களுக்கு தடிமன் வருகிறது.

இரண்டாவது, உங்கள் நாட்டில் இருந்து வந்த 2 லட்சம் தமிழ் அகதிகள் சம்பந்தமானது. ஆகவே இந்த விஷயத்தில இந்தியா அக்கறை செலுத்தாமலிருக்க முடியாது.

ஒப்பந்தத்தை நீங்கள் கூர்ந்து கவனித்தால் ஒன்று புரியும். தமிழர்களின் அபிலாஷைகள் சிலவற்றை பூர்த்தி செய்ய முயற்சிக்கும்படி ஒப்பந்தம் கூறுவதை காணமுடியும்.

இப்போது இலங்கை நண்பர்கள் சிலர் சமஷ்டி அமைப்பு முறை பற்றி என்னிடம் தெரிவித்தார். (Federalism) சமஷ்டி என்பது கூட்டுச் சம்மேளனம் (Confederation) போன்றதல்ல.

நாம் கூட்டுச் சம்மேளன முறைக்கு ஆதரவில்லை எமது நாட்டில் இருப்பது சமஷ்டி அமைப்பு போன்றதுதான். அதில் தவறுகள் இருக்கலாம். ஆனால் கூடுதலாக நன்மைகள் உள்ளன.

இனரீதியாக பிரிபடும் நாடுகளின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வாக சமஷ்டி அமைப்பு தான் காணப்படுகிறது. [இ-எ]

சின்னஞ்சிறு விளம்பரம்

ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் (Steno) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகிறது. Fodo, 89/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக) (சி/5664)

கல்வி

கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். பின்வரும் ஆங்கில பயிற்சிகள் நடைபெறுகின்றன: சனி, ஞாயிறு வகுப்புகள் தனிப்பட்டவர்களுக்கான பயிற்சி (Individual-tuition) உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும் (House Visits) பயிற்சிகள் அனைத்தும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரால் நடத்தப்படும்.

(15568)

கிளீன் கட்

தமிழ், ஆங்கில ரைப்பிங், றோணியோ வேலைகளுக்கும், அடையாள அட்டைகளை லமினேட் செய்வதற்கும், மற்றும் போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கும், கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(15592)

மணமகள் தேவை

கொழும்பில் ஒரு கொம்பனியில் நல்ல பதவி வகிக்கும் 31 வயதுடைய நல்ல குடும்பத்தைச் சேர்ந்த யாழ். இந்து மகனுக்குப் பெற்றோர் அழகிய மணமகளைத் தேடுகின்றனர். குற்றமற்ற சாதகம். குறிப்புடனும் மற்றும் விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். இல. 175, C/o உதயன். (15591)

தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்

G. C. E (A/L) பௌதிகவியல், தூயகணிதம் பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளோடு மேற்படி பாடங்களை பல வருடங்களாக கற்பித்துவரும் ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது. விபரங்களுக்கு பாலா மாஸ்டர் B, Sc (Cey) 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(15239)

பரீட்சை (ஆண்டு 5)

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை 27 - 01 - 91 ஞாயிறு மு. ப 8. 00. மு. ப 10. 30க்கு 219, நாவலர் வீதி, (யுப்பிறற் வீடியோ சென்ரர் முன்பாக) யாழ்ப்பாணம். பி. ப 1. 30க்கு யக்கன் வைத்தியசாலை முன்பாக, கொக்குவில் மேற்கு, (குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி,) நடைபெறும். மாதிரி வகுப்புகளும் புதிய ஆண்டு 3, 4, 5 வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. (15573)

பரீட்சை வினாத்தாள்

மார்ச் 1991 O/L பரீட்சைக்கு உதவியாக Dec 1990 இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி (ஆங்கிலம், சமூகக்கல்வி சமயம் கோட்டுப்படம் வினாத்தாள் உட்பட) விற்பனையாகிறது. மொத்தமாக வாங்குவோர்க்கு விலைக் கழிவு உண்டு. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக் கொள்ள முடியும். எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரியூட், இருபாலைச் சந்தி. (15580)

தேவை

கழுவித் துப்பரவாக்கப்பட்ட முழு வெற்றுப்போத்தல், அரைப்போத்தல் திரவம் கொள்ளக்கூடிய போத்தல்கள் மூடியுடன் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(சி/5678)

மில்க்வைற் திரவ சவர்க்காரம்

Milk White, Liquid Soap போத்தல் ரூ 90/- மட்டுமே நெல்லியடி கட்டைவேலி ப. நோ. கூ சங்கத்திலும் விற்பனையாகிறது. மில்க்வைற்-யாழ்ப்பாணம். (சி/5679)

குப்பி விளக்கால் சிசு தீக்காயம்

குப்பி விளக்குச் சரிந்ததினால் 32 நாள் பச்சிளம் குழந்தை பலத்த எரிகாயங்களுடன் மானிப்பாயில் இருந்தும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவு படுக்கைக்குப் போகும் போது குப்பி விளக்கை எரியவிட்டு நித்திரை செய்ததாகவும், இரவு குழந்தை விளக்கைத் தட்டியதால் குழந்தையின் சட்டையில் தீ பிடித்ததாகவும் குழந்தையின் தாயார் தெரிவித்தார். (இ - 100)

முனீஸ்வரன் ஆலயத்தில் வழிபாடு

கொழும்புத்துறை ஜன. 24 கடந்த பல மாதங்களாக மூடப்பட்டுக் கிடந்த யாழ். கோட்டைப் பகுதி முனீஸ்வரன் ஆலயத்தில் சென்ற வியாழக்கிழமை தொடக்கம் நித்தியபூசை, வழிபாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

(ஞ-30)

மின்கம்பங்களில் திருத்தவேலை

விமான, ஷெல், பிரங்கிக் குண்டுவீச்சுகளால் குருநகர் பகுதியில் அரையும் குறையுமாக இருந்துவரும் மின் விநியோக கம்பங்களை யாழ். மாநகரசபை மின்விநியோகப் பகுதி ஊழியர்கள் அகற்றுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

(இ-51)

மில்க்வைற் திரவ சவர்க்காரம்
சகல தேவை அழுக்கு நீக்கி

Milk White Liquid Soap
All - Purpose Dirt Remover.

சாதாரண வீட்டுச் சலவைக்கு பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்திட நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவை துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும், பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ்செய்யவும்.

- மில்க்வைற்

(சி-5677)

முக்கிய அறிவித்தல்

J.H.C - GELT Centre

யாழ் இந்துக்கல்லூரியின் 89/90 ஆம் ஆண்டு G.E.L.T-P.O.P மாணவர்களுக்கான பணக்கொடுப்பனவுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 25 - 01 - 91 மாலை 3-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறும். நூலகப் புத்தகங்கள் அனைத்தும் அத்துடன் சஞ்சிகைப்பணமாக ரூபா 100 உம் கொண்டுவரப்படல் வேண்டும். அனைத்துமாணவர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

N. தேவபாலசிங்கம்
கல்வி - இணைப்பாளர்

(15588)

தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அரசாங்க/பொது ஸ்தாபனங்களை நிர்மாணிக்க பின்வரும் பொருள்கள் தேவை. இவற்றை வழங்க விரும்புவோர் கூறுவிலைகளை செயலாளர், வடமாகாண ஒப்பந்தகாரர் சங்கம், இல. 15, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி என்ற முகவரியில் சமர்ப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

1. நாகர் கோவில் மண் — 1 கியூப்
2. அரியாலை மண் — 1 கியூப்
3. கண்டாவளை ஆற்றுமண் — 1 கியூப்
4. 3/4" கல் — 1 கியூப்
5. 5/8 " — 1 கியூப்
6. பாலை மரம் — 1 கன அடி
7. வேம்பு — 1 க. அடி
8. முதிரை — 1 க. அடி
9. சிமெந்து — 1 பைக்கற்

(15594)

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமோதூத வருடம் தை 12ஆம் நாள்
(25 - 01 - 1991) வெள்ளிக்கிழமை நண்பகல்
12.40 தொடக்கம் 1.30 வரையுள்ள
★ சுப முகூர்த்த வேளையில் ★

திருநிறைசெல்வன்
ஜெயராசா

திருநிறைசெல்வி
ஜெனோராணி

ஆகிய இருவருக்கும் வண்ணை - ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நலவரவை நாடும்:

திருமதி ஈ. சோமசுந்தரம்,
618, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.

திரு. திருநாவுக்கரசு ஈசன்,
579, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.

[தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை]

(15241)

முக்கிய அறிவித்தல்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் பண்டத்தரிப்பு கல்விப் பிரிவு

மேற்படி கல்விப் பிரிவுக்கான நிர்வாகக் குழுவினைத் தெரிவு செய்வதற்கான பொதுச் சபைக் கூட்டம் 25 - 01 - 91 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்ரீ கணேச வித்தியாலயம் சித்தன்கேணியில் நடைபெறும். பண்டத்தரிப்புக் கல்விப் பிரிவில் இயங்கும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(15593)

யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சுன்னாகம்

ஆண்டு- 6 அனுமதி- 1991

மேற்படி விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகத்தில் 5 - 2 - 91 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பரீட்சை திகதி: 10 - 2 - 91 — மு ப. 9, மணி
பாடங்கள்: தமிழ், கணிதம்
பரீட்சைக் கட்டணம் ரூபா. 10/-

அதிபர்.

(சி/5680)

மரண அறிவித்தல்கள்

திரு. வேலுப்பிள்ளை நாகரட்ணம் (J. P.)

(அரச நில அளவையாளர், கச்சேரி, திருகோணமலை)

வே. நாகரட்ணம் அவர்கள் 11 - 1 - 91 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், புஷ்பதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை)யின் அன்புக் கணவரும், சரவணபவான (யா / பரியோவான் கல்லூரி), உமாதேவி திரு/ஸ்ரீ சண்முக வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-1-91 அன்று திருமலையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்;
சரவணபவான்,
(மகன்)

(15588)

திரு. தம்பு குழந்தைவேலு

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பு குழந்தைவேலு அவர்கள் 23 - 01 - 91 இல் அகாலமரணமானார். இவர் பாமளாதேவியின் அன்புக் கணவரும் சுதா, சுபேந்திரன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி ஆண்டு மாணவன்), ஜெயந்திரன் (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பரயகுருசாமி (P. W. D. ஓவசியர்)யின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (23-01 91) நடைபெற்றது.

தகவல்;
மகன்: கே. சுபேந்திரன்

(15595)

திரு. சி. வேலுப்பிள்ளை அவர்கள்

திரு. சி. வேலுப்பிள்ளை அவர்கள் 23-1-91 இல் காலமானார்.

அன்னார் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இல. 15, மாரிஅம்மன் வீதி திருநெல்வேலியில் வசித்தவரும், காலஞ்சென்ற திருமதி நல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சாந்தம்மா (கனடா) திருமதி. பத்மாவதி, திரு. மகேந்திரராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (கனடா) திரு. தி விஸ்வநாதன் திருமதி மலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 24. 1. 91 காலை 10மணியளவில் மேற்படி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கொக்குவில் [illegible] மடத்தடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திரு. தி. விஸ்வநாதன்
(மருமகன்)

(15596)

இப்பத்திரிகை திரு. உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.